# திருநெல்வேலி மாநகராட்சி

**2019ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் நாள் புதன்கிழமை காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

1) திருநெல்வேலி மாநகராட்சியில், திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவன (Tirunelveli Smart City Limited) நிதியின் கீழ், திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக புதியதாக 270 எண்ணம் மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicles) விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.486.00 லட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க. எண் 14595/2018/IHSDP-3-2018, நாள் 01.11.2018—ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண் 16856/2017/DO-2, நாள் 08.11.2018—ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படியும் இப்பணியினை மேற்கொள்வதற்கு மின்னனு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 8/2018—19 ன் படி தென்னிந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் மக்கள்குரல் தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் 08.11..2018—ம் தேதியன்றும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 01.11.2018—லும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 19.12.2018—ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், அன்றைய தினம் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையில் மட்டும் (1) M/s.Priyam Industries and Engineering Pvt. Ltd., Chennai (2) M/s.Arun Indian Motors, Salem (3) Shuttlecars India Pvt. Ltd., Chennai (4) Goenka Electric Motor Vehicles Pvt. Ltd., Delhi ஆகிய நான்கு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளை (Technical Bid) கூர்ந்தாய்வு செய்ததில் (1) Shuttlecars India Pvt. Ltd., Chennai (2) Goenka Electric Motor Vehicles Pvt. Ltd., Delhi ஆகிய இரண்டு நிறுவனங்களின் ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை திருப்தி செய்யாததால் தொழில் நுட்ப தகுதியிழந்தது. ஏனைய (1) M/s.Arun Indian Motors, Salem நிறுவனம், (2) M/s.Priyam Industries and Engineering Pvt. Ltd., Chennai ஆகிய இரண்டு நிறுவனங்களின் ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை திருப்தி செய்தமையால் தொழில்நுட்ப தகுதி வாய்ந்ததின் அடிப்படையில் இந்த நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி விலைப்பட்டியலை (Price Bid) 26.12.2018 —ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் விபரம் வருமாறு:—

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | M/s.Priyam Industries and Engineering Pvt. Ltd., Chennai | M/s.Arun Indian Motors, Salem நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) நிதியின் கீழ், திடக்கழிவு மேலாண்மை பணிக்காக புதியதாக 270 எண்ணம் மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicles) விநியோகம் செய்தல். | Rs.4,86,00,000/- | Rs.5,11,83,090/- மதிப்பீட்டை விட 5.315% அதிகம் (L2) | Rs. 5,10,30,000/- மதிப்பீட்டை விட 5% அதிகம் (L1) |

இப்பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Arun Indian Motors, Salem நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.50,30,000/— ஆகும். இது மதிப்பீட்டை விட 5.00% அதிகமாக இருந்தமையால் இந்த நிறுவனத்தை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு வருமாறு 27.12.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு இந்த நிறுவனம் தமது 31.12.2018 —ம் தேதிய கடிதத்தில், ஒரு BOV வாகனத்திற்கு ரூ.1,89,000/—க்கு பதிலாக தற்போது ரூ.1,79,810/— விலையின் அடிப்படையில் விநியோகம் செய்ய சம்மதித்துள்ளதால், அதன்படி 270 எண்ணம் BOV விநியோகம்

செய்வதற்கு ரூ.4,85,48,700/– ஆகும். இது மதிப்பீட்டை விட குறைவாகும். மேலும், 31.12.2018ல் மீண்டும் விலைக்குறைப்பு செய்ய இந்த நிறுவனத்தை கேட்டுக் கொண்டதில் 04.01.2019–ம் தேதிய கடிதத்தில் வெளிச்சந்தையில் இந்த நிறுவனம் மூலப்பொருட்கள் வெளிச்சந்தையில் விலை உயர்வு அதிகமிருப்பதால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது எனவும், தமது நிறுவனம் ஏற்கனவே விலைக்குறைப்பு செய்து வழங்கிய சம்மத கடிதத்தினை ஏற்குமாறு கேட்டுள்ளதினை தொடர்ந்து 07.01.2019ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை பரிந்துரையின்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளி நிறுவனமான M/s.Arun Indian Motors, Salem நிறுவனத்தின் விலைக்குறைப்புக்கு பின்வரும் மதிப்பீட்டை விட 0.11% குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.4,85,48,700/– ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில், திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவன (Tirunelveli Smart City Limited) நிதியின் கீழ், திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டிற்காக மதிப்பீட்டு தொகை ரூ.4.86 கோடி மதிப்பீட்டில் புதியதாக 270 எண்ணம் மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicles) விநியோகம் செய்யும் பணிக்கு 19.12.2018 அன்று பெறப்பட்ட நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி நிறுவனமான M/s.Arun Indian Motors, Salem நிறுவனத்தின் விலைக்குறைப்புக்கு பின்வரும் மதிப்பீட்டை விட 0.11% குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.4,85,48,700/– ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வதற்கு 07.01.2019ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை பரிந்துரையின்படி மாமன்றம் இந்த விலைக்குறைப்புக்கு பின்வரும் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.486.00 லட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவன நிதியின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையையும் திருநெல்வேலி சீர்மிகு நகர நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 150

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(இ1/6526/2015–TSCL)

---

2) திருநெல்வேலி மாநகராட்சியில், திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19 –ன் கீழ், வார்டு எண் 3, 5, 6, 55 மற்றும் வண்ணார்பேட்டை புறவழிச்சாலை ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள SV/MH/CFL விளக்குகளை மின் சிக்கன விளக்குகளாக (LED) மாற்றுதல் மற்றும் புதிதாக மின்கம்பத்துடன் கூடிய மின்சிக்கன விளக்குகள் (LED) (சிப்பம் எண்–1) அமைக்கும் பணிக்கு ரூ.1434.00 லட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க. எண் 14595/2018/ IHSDP –3–2018, நாள் 01.11.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க.எண் 16856/2017/DO–2 நாள் 08.11.2018–ல் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின்படியும் மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 9/2018–19–ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும்;; 15.11.2018–ம் தேதியன்றும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 15.11.2018–லும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 19.12.2018–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறை மற்றும் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவைகள்

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|
| 1 | M/s.Schnell Energy Equipments Pvt. Ltd., Coimbatore | Rs.14,96,000/- DD No.502639 Date. 18.12.2018<br>ICICI Bank Coimbatore |
| 2 | M/s.Sabari Electricals, Chennai | Rs.14,96,000/- BG No.AF01BGP 183520003 Date. 18.12.2018<br>KVB - Chennai |
| 3 | M/s.Akash Engineering Associates (P) Ltd Chennai | Rs.14,96,000/- DD No.022995 Date. 17.12.2018<br>Axis Bank Chennai. |

(1) M/s.Akash Engineering Associates (P) Ltd Chennai (2) M/s.Sabari Electricals, Chennai (3) M/s.Schnell Energy Equipments Pvt. Ltd., Coimbatore ஆகிய மூன்று நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் M/s.Schnell Energy Equipments Pvt. Ltd., Coimbatore நிறுவனம் தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி தகுதியிழந்ததாகிறது. எனவே மீதமுள்ள (1) M/s.Akash Engineering Associates (P) Ltd Chennai (2) M/s.Sabari Electricals, Chennai ஆகிய நிறுவனங்கள் மட்டும் தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனங்களின் விலைப்புள்ளி அட்டவணை மட்டும் 26.12.2018–ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | M/s.Sabari Electricals, Chennai நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு | M/s.Akash Engineering Associates, Chennai நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19 –ன் கீழ், வார்டு எண் 3, 5, 6, 55 மற்றும் வண்ணார்பேட்டை புறவழிச்சாலை ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள SV/MH/CFL விளக்குகளை மின் சிக்கன விளக்குகளாக (LED) மாற்றுதல் மற்றும் புதிதாக மின்கம்பத்துடன் கூடிய மின்சிக்கன விளக்குகள் அமைத்தல். (LED) (சிப்பம் எண்–1) | Rs.12,94,45,375/- | Rs. 13,98,32,124/- மதிப்பீட்டை விட 8.02% அதிகம் (L2) | Rs.13,59,37,928/- மதிப்பீட்டை விட 5.02% அதிகம் (L1) |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.Akash Engineering Associates, Chennai நிறுவனம்; (L1) ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள தொகை Rs.13,59,37,928/- ஆனது மதிப்பீட்டை விட 5.02% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 27.12.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 31.12.2018–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 5.02% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.84% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி

கூர்ந்தாய்வுக்குழு M/s.Akash Engineering Associates, Chennai நிறுவனத்தின் 31.12.2018 தேதிய விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.13,57,11,144/– ஆனது மதிப்பீட்டை விட 4.84% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 31.12.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 04.01.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான மின்கம்பம், UG Cablė, Wire, Street Light controller, ILM போன்ற மின்உபயோக பொருட்கள், மற்றும் தொழிலாளர் கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | (L1) நிறுவனத்தின் பெயர் | 31.12.2018ம் தேதிய விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்தப்புள்ளித் தொகை. (including GST) | 04.01.2019ம் தேதிய விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்தப்புள்ளித் தொகை. (including GST) |
|---|---|---|---|
| 1 | M/s.Akash Engineering Associates (P) Ltd. Chennai (L1) | Rs.13,59,37,928/- மதிப்பீட்டை விட 5.02% அதிகம் | Rs.13,57,11,144/- மதிப்பீட்டை விட 4.84% அதிகம் |

எனவே, 07.01.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Akash Engineering Associates, Chennai நிறுவனத்தின் 04.01.2019 விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.13,57,11,144/– (Thirteen Crore Fifty seven Lakhs Eleven Thousand one Hundred and Forty Four Only) மதிப்பீட்டை விட 4.84% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சி – திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–19–ன் கீழ் வார்டு எண் 3, 5, 6, 55 மற்றும் வண்ணார்பேட்டை புறவழிச்சாலை ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள SV/MH/CFL விளக்குகளை மின்சிக்கன விளக்குகளாக (LED) மாற்றுதல் மற்றும் புதிதாக மின்கம்பத்துடன் கூடிய மின் சிக்கன விளக்குகள் (LED) அமைக்கும் (சிப்பம் எண்–1) பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 07.01.2019 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Akash Engineering Associates, Chennai நிறுவனத்தின்; விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.13,57,11,144/– (Thirteen Crore Fifty seven Lakhs Eleven Thousand one Hundred and Forty Four Only) மதிப்பீட்டை விட 4.84% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேற்படி பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1434.00 லட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–2019ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையையும் திருநெல்வேலி சீர்மிகு நகர நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 151

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(இ1/6526/2015–TSCL)

---

3) திருநெல்வேலி மாநகராட்சியில், திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் (Smart City Limited) 2018–19–ன் கீழ், திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–19–ன் கீழ் வார்டு எண் 40, 41, 42, 43, 44 மற்றும் 53 ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள SV/MH/CFL விளக்குகளை மின் சிக்கன விளக்குகளாக (LED) மாற்றுதல் மற்றும் புதிதாக மின்கம்பத்துடன் கூடிய மின் சிக்கன விளக்குகள் (LED) (சிப்பம் எண்–2) அமைக்கும் பணிக்கு ரூ.1496.00 லட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல் முறை ஆணை ந.க. எண் 14595/2018/ IHSDP–3–2018, நாள் 01.11.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகம் செயல்முறை ஆணை ந.க.எண் 16856/2017/DO–2, நாள் 08.11.2018–ல் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டதின்படியும் மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 9/2018–19 ன் படி அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழின் அனைத்துப் பதிப்புகளிலும் 15.11.2018–ம் தேதியன்றும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 15.11.2018–லும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 19.12.2018–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறை மற்றும் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் 3 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன அவைகள்

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|
| 1 | M/s.Schnell Energy Equipments Pvt. Ltd., Coimbatore | Rs.14,96,000/-- DD No.502639 Date. 18.12.2018 ICICI Bank Coimbatore |
| 2 | M/s.Sabari Electricals, Chennai | Rs.14,96,000/-- BG No. AF01BGP 183520003 Date. 18.12.2018 KVB - Chennai |
| 3 | M/s.Akash Engineering Associates (P) Ltd Chennai | Rs.14,96,000/-- DD No.022995 Date. 17.12.2018 Axis Bank Chennai. |

மூன்று நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் M/s.Schnell Energy Equipments Pvt. Ltd., Coimbatore நிறுவனம் தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி தகுதியிழந்ததாகிறது. எனவே மீதமுள்ள (1) M/s.Akash Engineering Associates, Chennai (2) M/s.Sabari Electricals, Chennai ஆகிய நிறுவனங்கள் மட்டும் தொழில்நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் இரண்டு நிறுவனங்களின் விலைப்புள்ளி அட்டவனை மட்டும் 26.12.2018 ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | M/s.Sabari Electricals, Chennai நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு | M/s.Akash Engineering Associates, Chennai நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–19–ன் கீழ் வார்டு எண் 40, 41, 42, 43, 44 மற்றும் 53 ஆகிய பகுதிகளில் ஏற்கனவே | Rs.13,80,36,322/- | Rs.14,90,90,526/- மதிப்பீட்டை விட 8.01% அதிகம் (L2) | Rs.14,49,41,367/- மதிப்பீட்டை விட 5% அதிகம் (L1) |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ள SV/MH/CFL விளக்குகளை மின் சிக்கன விளக்குகளாக (LED) மாற்றுதல் மற்றும் புதிதாக மின்கம்பத்துடன் கூடிய மின் சிக்கன விளக்குகள் (LED) அமைத்தல் (சிப்பம் எண்–2) | | | |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு M/s.Akash Engineering Associates, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்துள்ள தொகை Rs.14,49,41,367/- ஆனது மதிப்பீட்டை விட 5% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல எனக் கருதி ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 27.12.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 31.12.2018–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 5.00% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.84% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஓப்பந்தப்புள்ளி கூா;ந்தாய்வுக்குழு M/s.Akash Engineering Associates, Chennai நிறுவனத்தின் 31.12.2018 தேதிய விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.13,57,11,144/–ஆனது மதிப்பீட்டை விட 4.84% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 31.12.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 04.01.2019ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான மின்கம்பம், UG Cablė, Wire, Street Light controller, ILM போன்ற மின்உபயோக பொருட்கள், மற்றும் தொழிலாளர் கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | (L1) நிறுவனத்தின் பெயர் | 31.12.2018ம் தேதிய விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்தப்புள்ளித் தொகை (including GST) | 04.01.2019ம் தேதிய விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்தப்புள்ளித் தொகை (including GST) |
|---|---|---|---|
| 1 | M/s.Akash Engineering Associates (P) Ltd. Chennai (L1) | Rs.14,49,41,367/- மதிப்பீட்டை விட 5% அதிகம் | Rs.14,47,12,608/- மதிப்பீட்டை விட 4.84% அதிகம் |

எனவே, 07.01.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Akash Engineering Associates (P) Ltd. Chennai நிறுவனத்தின் 04.01.2019ம் தேதிய விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,47,12,608/– (Rs. Fourteen Crore forty seven Lakhs Twelve Thousand Six Hundred and Eight Only) மதிப்பீட்டை விட 4.84% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில், திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவன (Tirunelveli Smart City Limited) நிதியின் கீழ் வார்டு எண் 40, 41, 42, 43, 44 மற்றும் 53 ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள SV/MH/CFL விளக்குகளை மின் சிக்கன விளக்குகளாக (LED) மாற்றுதல் மற்றும் புதிதாக மின்கம்பத்துடன் கூடிய மின் சிக்கன விளக்குகள் (LED) அமைக்கும் (சிப்பம் எண்–2) பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், திட்டப்பணியாக இருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு

2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 07.01.2019 ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் M/s.Akash Engineering Associates (P) Ltd. Chennai நிறுவனத்தின் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.14,47,12,608/– (Rs. Fourteen Crore forty seven Lakhs Twelve Thousand Six Hundred and Eight Only) மதிப்பீட்டை விட 4.84% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) இப்பணியின் மதிப்பிட்டுத் தொகை ரூ.1496.00 லட்சத்திற்கு திருநெல்வேலி சீர்மிகு நகர நிறுவனம் 2018–2019ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாகும் தொகையையும் திருநெல்வேலி சீர்மிகு நகர நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண் 152

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(இ1/6526/2015–TSCL)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளில் 5% RM தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு திரு.எஸ்.செல்வம் ஒப்பந்தகாரரால் 18.11.2018–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகள் விபரம் | 5% RM | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | Pro' D' main from LKS Nagar OHT Jeba garden W.No.26 MPM Ward | 37,343 | 2013-14/I/P.No.13 |
| 2 | Pro' D' Main for the left portion W.No.26 MPM Ward | 44,277 | 2013-14/I/P.No.17 |
| 3 | Pro' D' main at Thirumal Nagar Santhose Nagar Novel Nagar in MPM ward | 11,618 | 2014-15 P.No.13 |
| 4 | Pro'D'main at NH Colony Mary land & Various area in MPM | 24,139 | 2014-15 P.No.13 |
| 5 | Pro' laying 90 mm feeder main to Periya Kothaba Pallivasal South East street in MPM | 17,068 | 2014-15 P.No.11 |
| | Total | 1,34,445 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள 5% RM தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/–க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல்விதி 7(10)(i)(iii)–ன்படி 5% RM தொகை ரூ.1,34,445/–மட்டும் ஒப்பந்ததாரார் திரு.S.செல்வம் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 153

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ம.எண் 31/15–16)

---

5) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளில் 5% RM தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு திரு.எஸ்.செல்வம்

ஒப்பந்தகாரரால் **18.11.2018–ல்** சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகள் விபரம் | 5% RM (Rs.) | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | Pro' D' main in left out portion W,No,27 MPM | 41,699 | Lapsed 13-14/I/P.No.4 |
| 2 | Pro' D' Main at NGO B Colony 15th, 17th, 21 and 22nd street in MPM | 27,757 | Lapsed 2014-15 P.No.6 |
| 3 | Pro' D' main at Mullai Nagar & Ram Vilas Nagar Middle street in MPM ward | 18,731 | Lapsed 2014-15 P.No.5 |
| 4 | Pro'D'main at Mahilchi Nagar left out portion W.No.27 in MPM | 24,402 | Lapsed 2013-14/I/ P.No.15 |
| | Total | 1,12,589 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள 5% RM தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.**10,000/–**க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல்விதி 7(10)(i)(iii)–ன்படி 5% RM தொகை ரூ.**1,12,589/–**மட்டும் ஒப்பந்ததாரார் திரு.S.செல்வம் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் **154**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ம.எண் **31/15–16**)

---

**6)** திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளில் 5% RM தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு திரு.எஸ்.செல்வம் ஒப்பந்தகாரரால் **18.11.2018–ல்** சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகள் விபரம் | 5% RM (Rs.) | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | Providing 90 mm Feeder main to Hasarath Pillai Street& Santhanammalpuram W.No.38 in MPM ward | 30,250 | Lapsed 14-15/I/P.No.11 |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள 5% RM தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.**10,000/–**க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல்விதி 7(10)(i)(iii)–ன்படி 5% RM தொகை ரூ.**30,250/–**மட்டும் ஒப்பந்ததாரார் திரு.S.செல்வம் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் **155**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ம.எண் **31/15–16**)

---

**7)** திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலத்தில் கீழ்க்கண்டுள்ள ஏலஉரிமத்திற்கு செலுத்திய வைப்புத் தொகையினை திரும்ப வழங்கக் கேட்டு சம்பந்தப்பட்ட ஏலஉரிமதாரர்

திரு.த.ஆறுமுகம் என்பவரால் 25.07.2018–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | பதிவேடு விபரம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி சந்திப்பு பேருந்து நிலையத்தில் 2013–2016 முடிய உள்ள காலங்களுக்கு தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | தச்சநல்லூர் மண்டல அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 2017–18 பக்கம் எண் 16 | 18,000 |
| | | மொத்தம் | 18,000 |

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி சந்திப்பு பேருந்து நிலையத்தில் 2013–16 முடியவுள்ள காலங்களுக்கு தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு ஏலஉரிமதாரரால் செலுத்தப்பட்ட வைப்புத் தொகை ரூ.45,000/– மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.45,000/– தச்சநல்லூர் மண்டல அலுவலக 2016–2017ம் ஆண்டு காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் எண் 45–ல் இருப்பல் இருந்தது. மேற்படி வைப்புத் தொகையில் 60% ரூ.27,000/– 19.01.2017–ல் உரிமதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.45000/–ஐ உரிமகாலம் முடிவுபெற்றதால் 19.01.2017–ல் உரிமதாரருக்கு வழங்கப்பட்டது. தற்போது மீதமுள்ள வைப்புத் தொகை ரூ.18000/– மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10000/–க்கு மேல் உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(iii)–ன்படி வைப்புத் தொகை ரூ.18,000/–ஐ திரு.T.ஆறுமுகம் உரிமதாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 156

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(அ1/4139/2018–தச்சை)

---

8) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலத்தில் கீழ்க்காணும் பணிக்கு EMD/FSD தொகை ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டதனை திரும்ப வழங்க கேட்டு மேற்படி ஒப்பந்ததாரர் M/s Sri Balaji Associates நிறுவனத்தினரால் 24.01.2018–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | விபரம் | தொகை | வைப்புத் தொகை பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மண்டல பகுதிகளில் ஒளிரும் தன்மையுடன் கூடிய பெயர் பலகை அமைத்தல் | EMD-10000<br>FSD -10000 | திருநெல்வேலி மண்டல வைப்புத் தொகை பதிவேடு 2013–14 பக்கம் 2 மற்றும் 7 |
| | Total | 20000 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள EMD/FSD தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/–ஆக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல்விதி 7(10)(i)(iii)–ன்படி மேற்படி EMD/FSD தொகை ரூ.20,000/–மட்டும் M/s Sri Balaji Associates நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 157

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ம.எண் 1/2012–13)

---

9) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணி மேற்கொள்ள EMD தொகை ஒப்பந்ததாரரால் செலுத்தப்பட்டதனை திரும்ப வழங்கக் கேட்டு M/s S.R.Electricals நிறுவனத்தினரால் 07.05.2018–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகள் விபரம் | EMD | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | Maintenance of Handpump & power pumps | Rs.21,000/– | Lapsed 2010-11 P.No.10 |

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிடப்பட்ட EMD தொகை மூன்றாண்டுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/–க்கு உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல்விதி 7(10)(i)(iii)–ன்படி மேற்படி EMD தொகை ரூ.21,000/–மட்டும் ஒப்பந்ததாரார் M/s S.R.Electricals நிறுவனத்திற்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 158

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(E4/11426/2010–மை.அ)

---

10) திருநெல்வேலி மாநகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் தெருவிளக்கு உதிரி பாகங்கள் 2009–10, 2010–11, 2011–12, 2012–13 மற்றும் 2013–14ல் விநியோகம் செய்ததற்கான பட்டியல் தொகையில் பிடித்தம் செய்த 5% RM & FSD தொகையினை திரும்ப வழங்கக் கேட்டு M/s.Akash Engineering Associates (P) Ltd., நிறுவனத்தினரால் 10.05.2018 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| Year | FSD | RM | Lapsed Deposit Register / Page No. |
|---|---|---|---|
| 2009–10 | 41,179 | 53,920 | 2009-10 P.No.1, 2, 3, 4, 7, 10,12 |
| 2010–11 | 78,529 | 1,37,266 | 2010-11 P.No.1, 3, 5, 8, 11 |
| 2011–12 | 21,463 | 76,881 | 2011-12 P.No.2, 7, 8, 9 |
| 2012–13 | 1,326 | 6,630 | 2012-13 P.No.19,40 |
| 2013–14 | 10,000 | 92,090 | 2013-14 P.No.27, 46 |
| மொத்தம் | 1,52,497 | 3,66,787 | 5,19,284 |

அலுவலகக் குறிப்பு

மேற்படி தொகை மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பு உள்ளது. 5% RM & FSD தொகை மூன்றாண்டுகளுக்கு மேலாகி காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளபடியால் நகராட்சி நடைமுறை நூல் விதி எண் 7(10)(i)(iii)–ன்படி மேற்கண்ட

விபரப்படி உள்ள 5% RM & FSD தொகை ரூ.5,19,284/– மட்டும் M/s Akash Engineering Associates (P) Ltd., ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 159

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(மஎண் 174/12–13–தச்சை)

---

11) 2019ம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகப் பகுதிகளிலும் கரும்பு கடை, மஞ்சள் மற்றும் கிழங்கு வகைகள் வைத்து தற்காலிகமாக வியாபாரம் செய்பவர்களிடம் 01.01.2019 முதல் 18.01.2019 முடிய உள்ள தினங்களுக்கு ஆக்கிரமிப்பு கட்டணம் வசூலிக்கும் வகைக்கு 2018ம் ஆண்டு நிர்ணயம் செய்த ஆக்கிரமிப்பு கட்டணத் தொகையிலிருநது 10 சதவீதம் கூடுதல் செய்து கீழ்க்கண்ட விபரப்படி ஆக்கிரமிப்பு கட்டணம் நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

ஆக்கிரமிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்படும் விபரம்

| வ. எண் | இனம் விபரம் | 2018ல் நிர்ணயிக்கப்பட்ட ஆக்கிரமிப்பு கட்டணம் (ரூ) | உயர்வு 10 சதவீதம் | 2019ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்படும் ஆக்கிரமிப்பு கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| அ | 01.01.2019 முதல் 18.01.2019 முடிய 18 தினங்களுக்கு கரும்பு கடை ஆக்கிரமிப்பு கட்டணம் 6 x 6 அளவுள்ள காலியிடத்திற்கு | 2860 | 290 | 3150 |
| ஆ | 10.01.2019 முதல் 18.01.2019 முடிய வைக்கப்படும் கரும்பு கடை ஒன்றுக்கு ஆக்கிரமிப்பு கட்டணம் 6 x 6 அளவுள்ள காலியிடத்திற்கு (நாள் ஒன்றுக்கு) | 578 | 62 | 640 |
| இ | மஞ்சள் மற்றும் கிழங்குகள் தற்காலிகமாக சாலை ஓரங்களில் வியாபாரம் செய்வதற்கு ஆக்கிரமிப்பு கட்டணம் 6 x 6 அளவுள்ள காலியிடத்திற்கு (நாள் ஒன்றுக்கு) | 198 | 22 | 220 |

அலுவலகக் குறிப்பு

அ) மேற்கண்ட விபரப்படி 2019ம் ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகப் பகுதிகளிலும் கரும்புக்கடை, மஞ்சள் மற்றும் கிழங்கு வகைகள் வைத்து தற்காலிகமாக வியாபாரம் செய்பவர்களிடம் 01.01.2019 முதல் 18.01.2019 முடியவுள்ள காலத்திற்கு ஆக்கிரமிப்பு கட்டணம் வசூல் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) அவசர, அவசியத்தை முன்னிட்டு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மாமன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

தீர்மானம் எண் 160

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் அ1/10510/2009)

---

12) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ஒ.மு.எண் 4955/2018/எப்4 நாள் 12.03.2018ம் தேதிய கடிதத்துடன் வரப்பெற்ற மனுவில் திரு. ஆ.அருள் உதவிப் பொறியாளர் தனது வயதான தாயார் மற்றும் தந்தை, தனது குழந்தைகளின் படிப்பு மற்றும் தனக்கு ஏற்பட்டுள்ள எதிர்பாராதவிதமான வாகன விபத்தில் ஏற்பட்டுள்ள இடதுகால் முறிவு ஏற்பட்டு ஊன்று கோல் உதவியுடன் நடப்பது போன்ற தனது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு திருநெல்வேலி மாநகராட்சியிலேயே நிரந்தரமாக பணிபுரிய கேட்டுக்கொண்டுள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 10467/2018/எப்4, நாள் 26.06.2018ல், இப்பொருள் குறித்து உரிய மாமன்ற தீர்மானத்துடன், விரிவான குறிப்புரையுடனும், முழுவடிவிலான கருத்துருவை அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 242, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 04.12.2008–ல் திருநெல்வேலி மாநகராட்சியில் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ரூ.22.22 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் மூலமாக, நிதியுதவி பெற்று செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இப்புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டப்பணியினை நிறைவேற்றிட அரசாணை (ப) எண் 42, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.5) துறை, நாள் 03.02.2010–ன்படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5 கடிதம் ந.க.எண் 50341/09/எப்4, நாள் 20.02.2010 ன்படியும் திரு.ஆ.அருள், இளநிலை பொறியாளரை அயற்பணி அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக பணிமாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இவ்அரசாணையினை திருநெல்வேலி மாநகராட்சி மாமன்ற கூட்டத்தீர்மானம் எண் 656, நாள் 24.02.2010–ல் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் திரு.ஆ.அருள், உதவி பொறியாளர் 12.03.2010 முதல் பணியில் சேர்ந்தும் தற்போது வரை பணிபுரிந்து வருகின்றார்.

நகராட்சி ஆணையாளர், கும்பகோணம் நகராட்சி கடிதம் ந.க.எண் 2423/2010/சி1, நாள் 04.06.2010–ல் திருநெல்வேலி மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் உதவிப் பொறியாளராக பணிபுரியும் திரு.ஆ.அருள் என்பவருக்கு பி.டெக் (சிவில்) பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றமைக்காக இளநிலை பொறியாளர் பதவியிலிருந்து உதவிப்பொறியாளராக பெயர்மாற்றம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை– 5 அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 2570/2010/எப்2 நாள் 18.03.2010–ல் ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் திருநெல்வேலி மாநகராட்சியில் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டப்பணி (சிப்பம் 1, 2) முற்றிலும் முடிக்கப்பட்டு 09.05.2013–ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் காணொளி காட்சி மூலம் துவக்கி வைக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் விதிகளின்படி அயற்பணி காலம் மூன்று வருடம் கடந்துவிட்டபடியால் உதவி பொறியாளர்களை மீள பெற்றுக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண் சி1/1258/2010, நாள் 03.02.2014 மற்றும் 24.09.2014–ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடித எண் 37822/2014/F1–2, நாள் 22.01.2015ல் திரு.ஆ.அருள்,உதவிப் பொறியாளரை மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு மாற்றம் செய்து ஆணையிடப்படடது. இந்நிலையில் அன்னார் தனது 06.04.2015ம் தேதிய கடிதத்தில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு திண்டுக்கல் நகராட்சியில் பணிபுரிந்து வந்த திரு.சந்தோஷ்குமார் என்ற உதவிப்பொறியாளரை மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உதவிப் பொறியாளராக பணி நியமனம் செய்தும் பணியாற்றி வருகின்றார். எனவே தன்னை இடமாற்றம் செய்யப்பட்ட மேட்டுப்பாளையம் நகராட்சியில் தற்போது உதவிப் பொறியாளர் பணியிடம் காலியாக இல்லை. எனவே மாற்று பணியிடம் நியமிக்கும் வரை தன்னை திருநெல்வேலி மாநகராட்சியிலேயே பணிபுரிய அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

திருநெல்வேலி மாநகராட்சி உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையினரால் எழுப்பப்பட்டுள்ள தணிக்கை தடை தணிக்கை சீட்டு எண் 16/2015–16ல் அயற்பணியில் (On Deputation Basis) அடிப்படையில் பணியிட மாறுதல் ஆணை மூலம் பணியமர்த்தப்பட்டு மூன்றாண்டு காலம் கடந்த பின்னரும், அயற்பணியாளரை விடுவிக்காமல் இருந்து ஊதியம் மற்றும் படிகள் வழங்கியது மாநகராட்சியின் பொதுநிதி இழப்பு தொகை ரூ.4,32,762/– எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்னார் தனது மனுவில் தனது வயதான தாயார் மற்றும் தந்தை, தனது குழந்தைகளின் படிப்பு மற்றும் தனக்கு ஏற்பட்டுள்ள எதிர்பாராதவிதமான வாகன விபத்தில் ஏற்பட்டுள்ள இடதுகால் முறிவு ஏற்பட்டு, ஊன்று கோல் உதவியுடன் நடப்பது போன்ற தனது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு திருநெல்வேலி மாநகராட்சியிலேயே நிரந்தரமாக பணிபுரிய கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் தன்னை திருநெல்வேலி மாநகராட்சி பொறியியல் பணியாளர்களின் பணிமூப்பு பட்டியலில் தன்னை இளையவராகவும் சேர்த்துக்கொள்ள சம்மதித்து கடிதம் தந்துள்ளார். மேலும் இப்பொருள் குறித்து மாமன்ற தீர்மானத்துடன் முழுவடிவிலான கருத்துருவை அனுப்பி வைத்திட நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 10467/2018/எப்4, நாள் 23.10.2018ல் கேட்டுக்கொண்டதற்கிணங்கவும், திருநெல்வேலி மாநகராட்சியில் தற்போது பொறியியில் பிரிவில் பல திட்டப்பணிகள் நடைபெற்று வருவதாலும் அன்னாரை திருநெல்வேலி மாநகராட்சியில் நிரந்தரமாக பணிபுரிய உரிய ஆணை வழங்கிட கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் முடிவுக்கும், உத்திரவுக்காகவும்,

அலுவலகக்குறிப்பு :

திருநெல்வேலி மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் உதவிப் பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஆ.அருள் என்பவர் தனது வயதான தாயார் மற்றும் தந்தை, தனது குழந்தைகளின் படிப்பு மற்றும் தனக்கு ஏற்பட்டுள்ள எதிர்பாராதவிதமான வாகன விபத்தில் ஏற்பட்டுள்ள இடதுகால் முறிவு ஏற்பட்டு ஊன்று கோல் உதவியுடன் நடப்பது போன்ற தனது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு திருநெல்வேலி மாநகராட்சியிலேயே நிரந்தரமாக பணிபுரிய அனுமதிக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

திருநெல்வேலி மாநகராட்சியில் தற்பொழுது அனுமதிக்கப்பட்ட உதவிப்பொறியாளர்/ இளநிலை பொறியாளர் பணியிடங்கள் மொத்தம் 18. தற்போது பணியில் இருப்பவர்கள் 10. மீதம் 8 பணியிடம் காலியாக உள்ளது. தற்போது பொறியியல் பிரிவில் முக்கிய திட்டப்பணிகள் நடைபெற்றுவருவதால் அன்னாரை திருநெல்வேலி மாநகராட்சியில் காலியாக உள்ள உதவிப்பொறியாளர் பணியிடத்தில் பணிமூப்பில் இளையவராக நிரந்தரமாக பணிபுரிய உத்திரவு வழங்கிட கேட்டு நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 161

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ந.க.எண்: சி1 1258 2010)

---

13) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலம், வார்டு எண் 50, காந்திநகர் எஸ்.எம்.நகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் அமைக்க அப்பகுதி மக்கள் நலச்சங்கத்திலிருந்து ஆணையாளர் அவர்களின் மக்கள் குறைதீர்க்கும் நாளில் மனு வரப்பெற்றுள்ளது. மேற்படி பகுதியில் புதிய மின்கம்பங்கள் மற்றும் மின்பாதையுடன் 20 வாட்ஸ் LED 2 எண்ணம் அமைக்கவும், ஏற்கனவே அமைந்துள்ள மின்கம்பத்தில் தெருவிளக்கு மின்பாதையில் புதியதாக 20 வாட்ஸ் LED விளக்குகள் 13 எண்ணம் அமைக்கவும், ஆக மொத்தம் 15 விளக்குகள் அமைக்க வேண்டியுள்ளதால் மேற்டி பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் அமைக்க மின்வாரிய மதிப்பீட்டுக் கட்டணங்கள் மற்றும் விளக்குகளின் மதிப்பும் சேர்த்து உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளபடி வார்டு எண் 50, காந்திநகர், எஸ்.எம்.நகர் பகுதியில் புதிய தெருவிளக்குகள் 20 வாட்ஸ் LED விளக்குகள் 15 எண்ணம் அமைக்க உத்தேச மதிப்பு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 162

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(இ1/4024/2018–திலி)

---

14) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 19, ஜான்சன் நகர் நான்கு வழிச்சாலை மற்றும் சிவந்திப்பட்டி சாலைக்கு நடுவே அமைந்துள்ள சாய்பாபா கோவிலுக்கு செல்லும் சாலையில் பக்தர்கள், சாய்பாபா ஆன்மீக மையம் சார்பாக தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி தரக்கோரியுள்ள விண்ணபத்தின்படி இந்த சாலையில் ஏற்கனவே அமைந்திருக்கும் 27 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 27 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 27 எண்ணம் மின்கம்பங்களுக்கு இடையே தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 27 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 163

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(இ2/11025/18–மே.பா.)

---

15) திருநெல்வேலி மாநகராட்சியில் பொதுநிதியின் கீழ், திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 44, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிட வசதிகள் அமைக்கும் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண் 71, நாள் 20.8.2018–ல் ரூ.63.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 34/2018–19 ன்படி மாநில அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், தினச்செய்தி தமிழ் நாளிதழின் அனைத்துப்பதிப்புகளிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் 13.12.2018–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி 31.12.2018–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் திருமதி.க.அமராவதி மற்றும் திரு.எஸ்.கண்ணன் ஆகிய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களது விலைப்புள்ளி அட்டவணைகள் 03.01.2019 ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | திருமதி.அமராவதி ஒப்பந்தக்காரரின் ஒப்பநதப்புள்ளி மதிப்பு | திரு.எஸ்கண்ணன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி மண்டலம் வார்டு எண் 44, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிட வசதிகள் அமைத்தல் | ரூ.62,02,988/– | ரூ. 65,74,034/– மதிப்பீட்டை விட 5.98% அதிகம் | ரூ. 66,27,861/– மதிப்பீட்டை விட 6.85% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.க.அமராவதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.65,74,034/–ஆனது மதிப்பீட்டை விட 5.98% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 03.01.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 07.01.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 5.98% அதிகமான விலை விகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 4.95% அதிகமான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு திருமதி.க.அமராவதி, ஒப்பந்தக்காரரின் முதலாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தையில் கொடுத்துள்ள தொகை ரூ.65,10,036/– ஆனது மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக உள்ளதால் ஒப்பந்ததாரரை மீண்டும் விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 07.01.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 09.01.2019–ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று தற்போது மேற்படி பணிக்கு தேவையான கட்டிடப் பொருட்கள், குறிப்பாக எரிபொருள் மற்றும் வேலை ஆட்களுக்கான கூலி ஆகியவை சந்தையில் எதிர்பாராதவிதமாக அதிகமாகிவிட்டபடியால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 09.01.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திருமதி.க.அமராவதி, ஒப்பந்தக்காரரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின் வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.65,10,036/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் திருநெல்வேலி வார்டு எண் 44, கல்லணை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிட வசதிகள் அமைத்தல் பணி அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும், பள்ளி குழந்தைகளின் சுகாதார நலன் கருதி மேற்படி பணியினை அவசியமாக மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகா;ப்புற உள்ளாட்சி களுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 09.01.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திருமதி.க.அமராவதி ஒப்பந்தக்காரரின் இரண்டாவது விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்குப் பின்வரும் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.65,10,036/– மதிப்பீட்டை விட 4.95% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்164

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(மதிப்பீடு எண் 39/2018–19திலி)

16) திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை பம்பிங் மெயின் 12.55 கிலோ மீட்டர் கழிவுநீர் குழாய்கள் 40 கிலோ மீட்டர், கழிவுநீர் ஊந்து நிலையங்கள் நான்கு எண்ணம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று மற்றும் ஆள்இறங்கு குழிகள் 7924 எண்ணங்கள் ஆகியவற்றை ஒருவருட காலத்திற்கு இயக்கி பராமரிக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள திட்டமதிப்பீடு ரூ.243.00 இலட்சத்திற்கும் மற்றும் மேற்படி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அங்கீகாரத்தினை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடமிருந்து பெறுவதற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்டுள்ளவாறு திருநெல்வேலி மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடை பம்பிங் மெயின் 12.55 கிலோ மீட்டர், கழிவுநீர் குழாய்கள் 40 கிலோ மீட்டர், கழிவுநீர் ஊந்து நிலையங்கள் நான்கு எண்ணம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று மற்றும் ஆள் இறங்கு குழிகள் 7924 எண்ணங்கள் ஆகியவற்றை ஒரு வருட காலத்திற்கு இயக்கி பராமரிக்கும் பணிக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.243.00 இலட்சத்திற்கும் மற்றும் மேற்படி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அங்கீகாரத்தினை தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாகஆணையரகம், சென்னை அவர்களிடமிருந்து பெறுவதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 165

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(ந.க.எண் இ1/579/2019)

---

17) திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 1, 2, 3 பகுதி, 4, 5, 8 மற்றும் 9 பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு சுத்தமல்லி புதிய தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து 12 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டர்களை இயக்கி பராமரிப்பு செய்யும் பணியானது 15.06.2017 முதல் நான்கு மாத காலங்களுக்கு 16.10.2017 வரை மதிப்பீட்டுத் தொகை ரூ.8.90 லட்சத்திற்கு ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.செல்வம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் 17.10.2017 முதல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் வரை மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஆணையாளர் அவர்களால் 06.10.2017–ல் ஒப்புதல் வழங்கியுள்ளதின் பேரில் 12.12.2018 முடிய அன்னாரால் பராமரிப்பு பணி மேற்கொண்டமைக்கும், அதற்கு செலவிடப்பட்ட தொகை ரூ.30,88,400/–க்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கவும் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு, தச்சநல்லூர் மண்டலம், வார்டு எண் 1, 2, 3 பகுதி, 4, 5, 8 மற்றும் 9 பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு சுத்தமல்லி புதிய தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து 12 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின்மோட்டர்களை இயக்கி பராமரிப்பு செய்யும் பணியானது 15.06.2017 முதல் நான்கு மாத காலங்களுக்கு 16.10.2017 வரை மதிப்பீட்டுத் தொகை ரூ.8.90 லட்சத்திற்கு ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.செல்வம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் 17.10.2017 முதல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் வரை மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஆணையாளர் அவர்களால் 06.10.2017–ல் ஒப்புதல் வழங்கியுள்ளதின் பேரில் 12.12.2018 முடிய அன்னாரால் பராமரிப்பு பணி மேற்கொண்டமைக்கும், அதற்கு செலவிடப்பட்ட தொகை ரூ.30,88,400/–க்கும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 166

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.